REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: [illegible]

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: புரட்டாசி 10உ திங்கள் (26—9—55) ★ ★ வெளியூர்: புரட்டாசி 11உ செவ்வாய் (27—9—55) [இதழ் [illegible]

## ஏரிகளின் தண்ணீர்: நீராவியாக மாறுவதை தடுப்பதற்குத் திட்டம்?

மைசூர் இராஜப் பிரமுகர், சமீபத்தில் கெனியாவுக்குச் சென்றிருந்தாரல்லவா? அங்கு அவர் ஏரிகளின் தண்ணீர் நீராவியாக மாறுவதைத் தடுப்பதற்கு பல திட்டங்கள் கையாளப்படுவதைக் கண்டார்; அந்த அனுபவத்தையொட்டி, இந்தியாவிலுள்ள ஏரிகளின் தண்ணீர் நீராவியாக மாறுவதைக் குறைக்க அல்லது தடுக்கப்படுவதற்கான திட்டமொன்றை இந்திய சர்க்காருக்கு அவர் சமர்ப்பித்துள்ளாராம்.

# 'இயேசுநாதர் வணங்கப்படும் இடமெல்லாம் ஒரே நாடா?'

## 'இராமனை, கிருஷ்ணனை வணங்குவதாலேயே இந்தியா ஒரே நாடாகி விடுமா?'

### டாக்டர் இராதாகிருஷ்ணனுக்கு அண்ணாதுரை தரும் பதில்

சென்னை, செப். 26—

"இராமனையும், கிருஷ்ணனையும் காஷ்மீர் முதல் கன்னியாகுமரிமுனை வரை வாழும் மக்கள் அறிந்திருக்கின்றனர்; எனவே, இந்த மக்கள் வாழும் இந்திய உபகண்டம் முழுவதும் ஒரே நாடுதான்—என்று, பெரிய தத்துவ மேதை என்று கூறப்படும் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறி இருக்கிறார்;

"இராமனையும், கிருஷ்ணனையும் பற்றிப் பேசுகிற—அவர்களை வணங்குகிற மக்கள் எல்லோருமே ஒரு நாட்டவராகிவிட முடியுமா?

"அண்மையில் குன்றக்குடி அடிகளார் கூறியிருக்கிறார்—'இந்தோனேஷியாவில் கம்ப இராமாயணம் தெரிகிறது; இராமனைப் பற்றி அங்குள்ளோர் தெரிந்திருக்கின்றனர்'—என்று! இலங்கையில் சீதை சிறை வைக்கப்பட்ட அசோக வனத்தில், அவள் உகுத்த கண்ணீர் பட்ட இடம் இன்னமும் கூட இருக்கின்றன என்றும் கூறுகின்றனர்; 'இராமனையும் கிருஷ்ணனையும், சீதையையும் இந்தோனேஷியாவும், இலங்கையும் தெரிந்திருக்கின்றன' என்பதாலேயே, அந்த நாடுகளையும் டில்லி ஆட்சிக்கு உட்படுத்திவிட முடியுமா, இந்திய அரசியலார்? டாக்டர் இராதாகிருஷ்ணனால் இது சாத்தியமா?

"இயேசுநாதரை வணங்குபவர்கள் உலகில் எத்தனை கோடி மக்களிருக்கின்றனர்? அவர்கள் அத்தனை பேரும், இயேசுநாதரை வணங்குவதினாலேயே ஒரே நாட்டு மக்களாகி விடுவார்களா? அப்படி ஒரே நாட்டு மக்களாகவா இன்று கருதப்படுகின்றனர்? இல்லையே!

"அப்படி இருக்கும்போது, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை வாழும் மக்கள் இராமனையும், கிருஷ்ணனையும் வணங்குவதாலேயே அவர்கள் எல்லோரும் ஒரே நாட்டவர்—அவர்கள் வாழும் நாடு ஒரே நாடு—இந்தியா ஒரே நாடுதான்—என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறுவது எப்படி அறிவுடைமையாகும்?

"டாக்டர் இராதாகிருஷ்ணன் போன்றோர் இப்படி வாதாடுவதற்குக் காரணம், வேறு வரலாற்று ஆதாரங்களால் 'இந்தியா ஒரே நாடுதான்,' என்று எடுத்துக்காட்ட முடியாதது தான்!

"வெள்ளையர் காலத்திற்கு முன்புவரை, தென்னாடு—திராவிடம் தனித்து வாழ்ந்தது, தனிச் சிறப்புடன்—என்பதற்கு வரலாற்று ஆதாரங்கள் இருக்கின்றனவே தவிர, 'வடநாட்டிற்கு திராவிடம் அடிமைப்பட்டிருந்தது' என்பதற்கு என்ன ஆதாரமிருக்கிறது?

"நாம் பெருமையுடன் வாழ்ந்த நாடு—நம் மூதாதையர் ஆண்ட நாடு—எவருக்கும் அடிமைப்பட்டிராத தென்னாடு—இன்று மட்டும் என்ன நியாயத்திற்காக வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருக்க வேண்டும்?

"நாம் திராவிட நாடு என்று கூறும்போதே, 'நமது நாடு எப்படிப்பட்ட நாடு,' என்பதை, அடைமொழியுடன் கூறுகிறோம்;

"'திராவிடர் நாடு'—என்று நாம் கூறுவதில்லை; 'திராவிட நாடு' என்றே கூறுகிறோம்; 'திராவிட' என்ற அடைமொழி திராவிட மக்களின் இனப் பெயரை மட்டும் குறிப்பதல்ல; அந்த இனத்தின் பண்பையும் சேர்த்துக் குறிப்பதாகும்;

"திராவிடர் பண்பு, தனிச் சிறப்பும், பெருமையுங்கொண்டதாகும்; அந்தப் பெருமை காப்பாற்றப்படுவதற்காக—திராவிடர் நல்வாழ்வு பெறுவதற்காக—விடுதலையுடன் வாழ்வதற்காகத் தென்னாடு—திராவிடம், வடநாட்டிலிருந்து பிரிய வேண்டும் என்று கோருகிறோம்;

"சிலர், கன்னடியரும், ஆந்திரரும், கேரளரும், திராவிட நாடு கேட்கவில்லையே—என்று கூறுகின்றனர்;

"தோட்டத்திற்குப் போகிறோம், மலர் பறிப்பதற்காக; மலர்ந்திருக்கும் மல்லிகைகளைப் பறிக்கிறோம்; மலராதிருக்கும் மொக்கு

(4-ம் பக்கம் பார்க்கவும்)

## மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு எதிரொலி!

### 'இன்ஷ்யூர்' செய்வோர் தொகை அதிகரிப்பு?

"குஜராத்—மராத்தி பேசும் பகுதிகளாகப் பம்பாய் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும்,' என்று மாநில புனரமைப்புக் குழு சிபாரிசு செய்துள்ளதென வதந்தி ஒன்று பம்பாயில் கிளம்பியுள்ளதின் காரணமாக, பல வியாபாரிகள் தங்கள் கடைகளையும், சொத்துக்களையும் 'இன்ஷ்யூர்' செய்கின்றனராம்!

குழுவின் அறிக்கையால் பெரிய கலவரம் ஏற்பட்டு, தங்கள் சொத்துக்களுக்கு ஆபத்து வந்துவிடுமோவென அவர்கள் பெரிதும் அஞ்சுகின்றதின் விளைவே இதற்குக் காரணமாகும்.

## பதிலுக்குப் பதிலாம்!

"சைப்ரஸ் தீவிலிருந்து பிரிட்டன் வெளியேறிவிட்டால்—என்ன நேரிட்டாலும் சரி—அத்தீவை, துருக்கி கைப்பற்றித்தான் தீரும்; அத்தீவிலுள்ள துருக்கியர் தாக்கப்பட்டாலும், துருக்கியர் சொத்துக்கள் சேதமுற்றாலும், அதற்கெல்லாம் பதிலுக்குப் பதில் நடவடிக்கை எடுப்போம்,"

என்று, சைப்ரஸின் எதிர்காலம் பற்றி லண்டனில் நடைபெற்ற மாநாட்டில் கலந்துகொண்ட துருக்கியின் தூதுக் குழுத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

## கோவா சத்யாக்கிரகம்

### தொடர்ந்து நடத்த முடிவு

கோவா விடுதலைக்காகத் தொடர்ந்து 'சத்தியாக்கிரகம்' நடத்துவது என்று சர்வ கட்சி கோவா விடுதலைக் குழுவினர், மூன்று நாள் விவாதத்திற்குப் பிறகு முடிவு செய்திருக்கின்றனராம்.

'சத்தியாக்கிரக'த்தைத் திரும்பப் பெறவேண்டுமென்பதற்கு அரசியல் ரீதியான நியாயம் எதுவுமில்லை—என்று, குழுவினர் கருத்தறிவித்திருக்கின்றனர்.

மேலும், காந்தியார் பிறந்த நாளான அக்டோபர் 2-ந் தேதியன்று ஒரு 'சத்தியாக்கிரக'க் குழுவை கோவாவிற்கு அனுப்புவது என்றும் முடிவு செய்திருக்கின்றனராம்.

## இந்தியாவின் 'முன்னேற்ற'த்திற்கு எடுத்துக்காட்டு!

### தாழ்த்தப்பட்டோர் கோவிலுக்குள் நுழையக் கூடாதென 4,000 பெண்கள் மறியல்

இந்தூர், செப். 25—

இந்தூரைச் சேர்ந்த திகம்பர் ஜெயின் பெண்கள் சுமார் 4,000 பேர் நகரில் உள்ள தங்கள் வகுப்புக் கோவில்கள் முன்பு கூடி, அவற்றுள் தாழ்த்தப்பட்டோர் நுழையாமல் தடுப்பதற்காக மறியலில் ஈடுபட்டனராம்!

மராத்திய முறையில் உடை அணிந்திருந்த அந்தப் பெண்கள், எட்டு கோவில்களுக்கு முன்பு 'மறியல்' நடத்தினராம்!

தங்கள் கோவில்களுள் தாழ்த்தப்பட்டோர் நுழைவது பற்றி திகம்பர் ஜெயின் மக்களிடையே ஏற்பட்ட கருத்துவேற்றுமையை ஒட்டி, இந்தப் பெண்கள் 'மறியல்' நடவடிக்கையில் ஈடுபட்டனராம்!

## டால்மியா கைது செய்யப்பட்டார்

### ரூ. 2 கோடி மோசடி செய்ததாக வழக்கு

புதுடில்லி, செப். 25—

வடநாட்டுப் பிரபல தொழில் அதிபரும், பண முதலையும், பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் தலைவருமான இராமகிருஷ்ணா டால்மியா, அரசாங்கத்திடம் ரூ 2 கோடி மோசடி செய்ததாகவும், நம்பிக்கைத் துரோகம் இழைத்ததாகவும் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

டில்லி மாவட்ட நீதிபதி முன் அவர் நிறுத்தப்பட்டு, 14 நாட்கள் காவலில் இருக்க உத்தரவிடப்பட்டிருக்கிறார் என்றும் தெரிகிறது.

இந்திய சர்க்கார் நிதி இலாகா உதவிச் செயலாளர் கவுல் தந்த தகவலின் பேரில், இந்தியத் தனி போலீஸ் நிறுவனத்தினர், டால்மியாவைக் கைது செய்தனர் என்று தெரிகிறது.

பாரத் இன்ஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் நிர்வாகம் குறித்து விசாரணை நடத்த, கவுல்; இதற்குமுன் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்

அந்த விசாரணையின்போது, டால்மியா, ரூ. 2 கோடி பெறுமான சர்க்கார் பத்திரங்களை மோசடி செய்திருப்பது தெரிய வந்ததாம்.

ரூ. ஒரு கோடி சொந்த ஜாமீன், மற்றும் ரூ. இரண்டு கோடிக்கு ஜாமீன் பேரில் அவரை விடுதலை செய்ய நீதிபதி அனுமதி தந்ததாகவும், ஆனால் ஜாமீன் உரிய காலத்தில் தாக்கலாக முடியாது போய்விட்டதால் அவர் மாவட்டச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதாயும் தெரியவருகிறது.

## 48,000 சிப்பந்திகள் பயனடைவராம்!

### ஊதியத்தில் ரூ. 55 லட்சம் அதிகமாகுமாம்!

பாங்கி ஊழியர்கள் பிரச்சினையில், நீதிபதி கஜேந்திர காட்கர் குழுவின் சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு வழிகோலும் சர்க்கார் மசோதாவை மக்கள் சபை அங்கீகரித்துள்ளது.

இந்தச் சிபாரிசுகள் முழுவதையும் சர்க்கார் ஏற்றுக்கொண்டதின் மூலம் 48,000 ஊழியர்கள் பலன் பெறுவார்களென்றும், அவர்களுடைய ஊதியத்தில் ரூ. 55 லட்சம் அதிகமாகுமென்றும் தொழிலாளர் நல மந்திரி குறிப்பிட்டுள்ளார்.

## ஹிராகுட்டில் ஒரு எஞ்சினீயரிங் கல்லூரி

உத்கல் பல்கலைக் கழகத்தவர், ஹிராகுட்டில் ஒரு பொறி இயற் கல்லூரி துவக்குவதற்குத் தேவையான வசதிகளை ஹிராகுட் அணைக்கட்டு நிர்வாகக் கழகத்தினர் செய்துதரச் சம்மதித்திருப்பதாகத் தெரிகிறது.

## தென்னாட்டு விவசாயிகள் படும் வேதனை!

### 'ஏக இந்திய'வாதிகளின் கண் திறக்குமா?

புதுடில்லி, செப். 25—

"தென்னிந்தியாவில் விவசாயத் தொழிலாளர்களுக்கு மிகக் குறைந்த அளவு வேலை கிடைப்பதற்குக் காரணம், குறிப்பாகப் பெண்கள், பொதுவாக விவசாயத் தொழிலாளர்கள் அளவுக்கு அதிகமாகவே இருக்கின்றனர்; மேலும், மிகக் குறைவான அளவு நில உடைமையும் இதற்குக் காரணமாகும்,"

என்று, இந்திய சர்க்கார் நடத்திய விசாரணையின்போது தெரியவந்திருக்கிறது.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 26—9—'55 திங்கள்

# இப்போது வேண்டியதென்ன ?

பாகிஸ்தான் உருவாகி எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன. இந்த எட்டாண்டுக் காலத்தில் பாகிஸ்தானுக்கென ஒரு அரசியம் சட்டம் உருவாகி, நல்லதோர் ஆட்சி அமைவதில் உள்ள சிக்கல்கள் குறித்தும், பாகிஸ்தான் அரசியல் நிலையில் தோன்றிய குழப்பங்கள் குறித்தும் நாம் அவ்வப்போது இங்கு எழுதிவந்திருக்கிறோம்.

இப்போது, கவர்னர்-ஜெனரலாக கடந்த நான்காண்டு காலமாகப் பணிபுரிந்துவந்த குலாம் முகம்மது பதவியினின்றும் விலகி, ஓய்வு பெற்றுக் கொள்ளப்போவதாக அறிவித்திருக்கிறார். அவர் இரண்டு திங்கள் உடல் நலச் சீர்பெற என்று கூறி தற்காலிக ஓய்வு பெற்றபோதே இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

குலாம் முகம்மது கவர்னர்-ஜெனரலாயிருந்த காலத்தில், பாகிஸ்தான், பல்வகையான பெரும் நெருக்கடிகளை எல்லாம் சந்திக்க நேர்ந்தது. அந்த நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பலவும் அவருக்கு 'நாட்டின் இரட்சகர்' என்ற நற்பெயரை பாகிஸ்தான் மக்களிடமிருந்து பெற்றுத் தந்தது.

தான் ஓய்வு பெறும் இந்த வேளையில்கூட அவர், பாகிஸ்தான் தனக்கென ஒரு அரசியல் சட்டத்தை உருவாக்கிக்கொள்வதற்கு இப்போது நிலவும் சூழ்நிலைகளில், முடிந்த அளவு தேவையான ஒரு ஏற்பாடு செய்திருக்கிறார்.

அவர் செய்துள்ள இந்த ஏற்பாட்டினை, பாகிஸ்தானின் எதிர்காலத்தைச் சிறப்புடையதாக உருவாக்குவதற்கு பாக். தலைவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசியல் நிர்ணய சபையின் கடந்த சில நாட்கள் நடவடிக்கையைக் கண்ணுறும் போது, பாகிஸ்தான் மக்கள் தங்கள் எதிர்காலம் பற்றி அச்சப்படக்கூடிய நிலைதான் இன்னமும் நீடிப்பதாக எண்ண வேண்டியிருக்கிறது.

பாகிஸ்தானுக்கு எப்படிப்பட்ட ஒரு அரசியல் அமைப்புத் தேவை என்பதை நிர்ணயிப்பதற்காகக் கூடியுள்ள அரசியல் நிர்ணய சபையில், உறுப்பினர்கள் தங்களுக்கிடையில் உள்ள சொந்த விருப்பு—வெறுப்புகளைக் 'கக்கி'க் கொண்டிருக்கின்றனர். சபைத் தலைவர் சில நேரங்களில் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கே பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கடந்த நான்கு நாட்களுக்கு முன், தலைவர், உறுப்பினர்களை நோக்கி, 'இந்தச் சபையின் கௌரவம் காப்பாற்றப்படும் வகையில் நடந்துகொள்ளுங்கள்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்—மனவேதனையுடன்!

சபையில் கூடியுள்ளவர்கள், பாகிஸ்தானிடம் தாங்கள் கொண்டிருக்கிற நாட்டுப் பற்றை மனதில் கொண்டால், அரசியல் நிர்ணய சபையில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகளைத் தவிர்க்க முடியும்.

பொதுவாக, இன்று, 'பாகிஸ்தான் சிக்கல்களுக்குப் பரிகாரமே, இல்லை' என்பதல்ல; சர்க்காரும், அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்களும், தங்கள் தங்கள் கட்சி வெறியைக் குறைத்துக்கொண்டு, சொந்த விருப்பு—வெறுப்புகளை சிக்கல்களுடன் இணைப்பதைக் கைவிட்டு, எட்டு கோடி பாகிஸ்தான் மக்களின் நல்வாழ்வையும், எதிர்கால உறுதிப்பாட்டையும் மனதில் கொண்டு செயல்பட முற்பட்டால், பெரும்பாலான சிக்கல்களுக்குச் சுலபமாகத் தீர்வு காண முடியும்.

முன்னைய அரசியல் நிர்ணய சபை நிறைவேற்றிய விதிகளில் எவற்றையெல்லாம் இந்தப் புதிய அரசியல் நிர்ணய சபை அங்கீகரிக்க வேண்டும் என்பதில்கூட சிலருடைய சொந்த விருப்பு—வெறுப்புகள் நுழைக்கப்பட்டு, பாகிஸ்தான் மக்களின் பொது நலன்களுக்குக் குந்தகம் விளைவிக்க முயற்சிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

குலாம் முகம்மது கவனர்-ஜெனரல் பதவியிலிருந்து ஓய்வுபெறும் வேளையில் அறிவித்துள்ளதுபோல, பாகிஸ்தான்மீது தங்களுக்குள்ள நாட்டுப் பற்றைப் பிறர் சந்தேகிக்காதவகையில்,'பாகிஸ்தான் தலைவர்களும், ஆட்சியிலிருப்போரும் நடந்துகொள்ள வேண்டியதே இப்போது வேண்டற்பாலது!

## முன்னாள் மன்னர்களின் தாராளம்!

இராஜ்கோட், செப். 23—

"சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த நான்கு 'மன்னர்'கள் தங்களின் வருமானத்தின் ஒரு பகுதியை, தங்கள் தங்கள் வட்டத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காகச் செலவிட முடிவு செய்திருக்கின்றனராம்!

நவாநகர் மன்னரான இராஜப் பிரமுகர், சுமார் ரூ. 1 - இலட்சம் செலவில் ஜாம்நகரில் 22 தாழ்த்தப்பட்ட குடும்பங்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டம் பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறாராம்.

ஒரு பொதுநல இயக்கத்தின் 'சமூகசேவை' நடவடிக்கைகளுக்கு சுமார் ரூ. 45,000 ஒதுக்கப்போவதாக போர்பந்தர் மகாராணி அறிவித்திருக்கிறாராம்.

தானே அமைத்துள்ள க்ஷேம நல சங்கம் ஒன்றிற்காக ரூ. 45,000 ஒதுக்கித் தந்திருக்கிறாராம், திரங்தாரா மகாராஜா!

சென்னையின் முன்னாள் கவர்னரான பவநகர் மகாராஜா, பவநகரில் ஒரு பிரசவ விடுதி அமைப்பதற்காக ரூ 4,30,000 அன்பளிப்புத் தந்திருக்கிறாராம்!

### பரிசீலனை செய்கிறார்களாம்!

புதுடில்லி, செப். 23—

"பொது இடங்களிலுள்ள அயல் நாட்டவரின் சிலைகள் அகற்றப்படுவதற்குச் சில மாநிலங்கள் ஆதரவு தந்துள்ளன; சில மாநிலங்கள் மத்திய சர்க்கார் யோசனைப்படி நடப்பதாகக் கருத்தறிவித்துள்ளன; இப்பிரச்சினை பரிசீலனை செய்யப்படுகிறது; இதுவரையில் எந்த முடிவுக்கும் சர்க்கார் வரவில்லை," என்று மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சென்னை சட்டசபையில் கேள்வி நேரம்:

### வட ஆற்காட்டில் கம்பளித் தொழிற்சாலை

கோயமுத்தூர் மாவட்டத்தில், கம்பளத் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் கிடையாதென்றும், வட ஆர்காட்டில் விண்ணமங்கலத்தில் ரூ.11 30,000 செலவில் முரட்டுக் கம்பளங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறதென்றும் ரெவினியூ அமைச்சர் கூறியுள்ளார்.

* * *

### 4,640 ஜமீன்கள் ஏற்பு — ரூ. 40 இலட்சம் நஷ்டயீடு

"1948-ம் ஆண்டு ஜமீன் ஒழிப்புச் சட்டத்தின்படி, இதுவரையில், மாகாண முழுமையிலும் 4,640 - ஜமீன்களை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது; இவைகளில் 1,007 ஜமீன் நிலங்கள்—மற்றவை இனும் நிலங்கள்; இடைக்கால நஷ்டஈடாக ரூ. 40 - இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது," என்று ரெவினியூ அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

* * *

### நோயாளிகள் எண்ணிக்கை கூடுதலாகிறதாம்!

"சென்னையிலுள்ள அரசாங்க மருத்துவச்சாலையில், இடநெருக்கடி ஏற்பட்டிருக்கிறது; 1953-ம் ஆண்டில் 904 நோயாளிகள் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர்; 1954-ம் ஆண்டில் அத்தொகை 964 ஆக உயர்ந்துவிட்டது; 1953ல், மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் 164 பேர் இறந்தனர்; 1954ல் இறந்தவர் தொகை 92," என்று சுகாதார அமைச்சர் அறிவித்தார்.

* * *

### சர்க்கார் ஆதரிக்கிறதாம்!

"கால்நடை உலகில், தேவைக்கு ஏற்ப 'பொலி காளை'கள் கிடையாதாகையால், சிறந்த 'பொலி காளைகள்' அதிகரிப்பு திட்டத்தை சர்க்கார் ஆதரிக்கிறது," என்று, ரெவினியூ அமைச்சர் கூறியுள்ளார்.

* * *

### விவசாயிகளுக்குக் கடன் தருவதற்கு உத்தரவு

"கால்நடைச் செல்வத்தை வளர்ப்பதற்கு 4 சதவிகித வட்டியுடன் ரூ. 500 வரை விவசாயிகளுக்குக் கடன் தருவதற்குச் சர்க்கார் உத்திரவிட்டுள்ளனர்; இத்தொகை மூன்றாண்டுத் தவணைகளில் வசூலிக்கப்படும்; ஆனால், இந்தக் காளைகளை சர்க்கார் கால்நடைப் பண்ணைகளிலிருந்துதான் வாங்கவேண்டும்," என்று ரெவினியூ மந்திரி குறிப்பிட்டார்.

* * *

### பழுப்பு நிலக்கரியிலிருந்து எரிவாயு உற்பத்தி

"நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில், பழுப்பு நிலக்கரியிலிருந்து எரிவாயு உற்பத்தி செய்ய முடியுமெனக் கண்டுபிடிக்கப்பட்டது; அதை வீடுகளிலும், தொழிற்சாலைகளிலும் உபயோகப்படுத்தலாம்; ஆனால், அந்த எரிவாயுவை எடுத்துப் பயன்படுத்துவது இலாபகரமாக இருக்காதெனக் கருதப்பட்டதால், பெரும் அளவில் உற்பத்தி செய்வது பற்றி யோசிக்கப்படவில்லை," என்று, விவசாய மந்திரி அறிவித்தார்.

### வீதியில் 'ஐஸ் க்ரீம்' விற்பதற்குத் தடை!

சென்னை, செப். 23—

தொத்து நோய்கள் பரவாமல் தடுக்கும் நோக்கத்துடன், 'ஐஸ் க்ரீம்,' 'ஐஸ் புரூட்' போன்றவைகளை வீதிகளில் விற்கக்கூடாதென சர்க்கார் உத்திரவிட்டுள்ளனராம்; சட்டசபையில் இதுபற்றி தெரிவித்த சுகாதார அமைச்சர், இவைகளை அவ்வாறு விற்பதாக இருந்தால், 'லைசென்ஸ்' முறையில் பாதுகாப்புடன் கூடியதாக இருக்க வேண்டுமென்று உள்ளாட்சிக் கழகங்களுக்கு உத்திரவிட்டிருப்பதாயும் குறிப்பிட்டார்.

# தீண்டாமை மேற்கொள்வோரை 'வாரண்டு' இன்றி கைது செய்வர்!

*தீண்டாமை ஒழிப்புச் சட்ட விதிகள் விவரம்*

**1955-ம் ஆண்டு தீண்டாமை (குற்ற) சட்டம் சென்ற ஜூன் 1-ந் தேதி, நாடு முழுவதிலும் அமுலுக்கு வந்துவிட்டது. இனி யாராயினும், எந்த வகையிலாயினும் தீண்டாமையை மேற்கொண்டால் அவர்கள் சட்டப்படி குற்றம் செய்தவர்களாகக் கருதப்படுவார்கள். அவர்களை நீதிபதிகளின் 'வாரண்டி'ல்லாமலேயே போலீஸ் அதிகாரிகள் கைது செய்யலாம்!**

### இந்துக்களுக்குமட்டுமல்ல!

கோயில்கள் போன்ற சமயப் பொது இடங்களுக்கு யாரையும் வரவிடாது தடுத்தாலோ, அல்லது வழக்கமாக எல்லாருக்கும் செய்கிற பணியைக் குறிப்பிட்ட ஒருவருக்குச் செய்ய மறுத்தாலோ, அல்லது சமூக, பொருளாதார ரீதியில் எவ்வித தடைக்கட்டுப்பாடுகளை விதித்தாலோ, அவ்வாறு செய்கிறவர்கள் சட்டப்படி குற்றவாளிகளாவர் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படலாம்.

இந்தச் சட்டம் இந்துக்களுக்கு மட்டும்தான் என்றில்லாமல், முஸ்லீம்கள், கிறித்துவர்கள், இதர சமூகத்தவர்கள் ஆகிய எல்லாருக்கும் பொருந்துமாம்.

### எது குற்றம்?

மத சம்பந்தமான பிரச்சினைகளில் ஒரு மதத்தைச் சேர்ந்த எல்லாரும் ஒரே ரீதியில் பிரார்த்தனை, பூசை, வழிபாடு, சேவை முதலியவைகளைச் செய்வதற்குப் பெற்றுள்ள உரிமைக்கு விரோதமாக யாராவது தடை செய்தால் அது குற்றமாகும்; மேலும், பொதுவான ஒரு மத வழிபாட்டு இடத்திற்கு வருவதோ, அங்கு அனுமதிக்கப்படும் ரீதியில் பிரார்த்தனை செய்வதோ தடுக்கப்படக்கூடாது.

### பொது இடங்களில்....

கடைகள், பொது உணவு விடுதிகள், சிற்றுண்டிச்சாலைகள், விடுதிகள், தேநீர்க் கடைகள், பொழுதுபோக்கு இடங்கள் முதலியவைகளில், எல்லாரும் செல்லும் உரிமையை இச்சட்டம் அளிக்கிறது.

### தொழில் துறையில் உரிமை

யாரும், எந்தத் தொழிலையோ, அலுவலையோ, வியாபாரத்தையோ, உத்தியோகத்தையோ மேற்கொள்ளலாம்; அதற்குத் தடை கிடையாது. பொது மக்கள் உபயோகிக்க உரிமையுள்ள — அல்லது உடன் சமயத்தவர்கள் உபயோகிக்க உரிமையுள்ள ஆறு, குளம், ஊற்று, கிணறு, தொட்டி, குழாய் முதலிய தண்ணீர் இடங்கள், குளிக்கும் கட்டம், இடுகாடு, கக்கூசு, சாலைகள், பொது இடம் ஆகியவைகளை உபயோகிப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமைஉண்டு.

### குடியிருப்பு உரிமை:

மேலும் அச்சட்டம், 'யாரும் எந்த இடத்திலும் வீடு கட்டவோ, வீட்டை விலைக்கு வாங்கவோ, குடியிருக்கவோ உரிமை உண்டு,' என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

### 'புறக்கணிக்காதே— சட்டப்படி குற்றமாகும்'

"யாராவது தீண்டாமை காரணமாக, யாருக்காவது — எந்தப் பொருளையாவது விற்கவோ, அல்லது மற்றவர்களுக்குச் செய்கிற சேவையைச் செய்யவோ மறுப்பாரானால், அவர், இச்சட்டப்படி குற்றம் செய்தவராகக் கருதப்படுவார். அம்மாதிரியாக வித்தியாசம் பாராட்ட ஏற்பாடு செய்வதும் குற்றமாகும். அரசியலமைப்புச் சட்டப்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டதினால், தமக்கு ஏற்பட்டுள்ள உரிமைகளை அனுபவிக்க முற்படுகிற ஒருவரை, அல்லது, 'தீண்டாமையை' மேற்கொள்ள மறுக்கிற ஒருவரைப் பொருளாதார ரீதியில் புறக்கணிப்புச் செய்தாலும் குற்றம் செய்ததாகவே ஆகும்." என்பதும் அச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளுள் ஒன்று!

### மருத்துவ மனை — கல்விநிலையங்களில் அனுமதி

மருத்துவ மனைகளிலும், கல்வி நிலையங்களிலும், அவற்றைச் சேர்ந்த விடுதிகளிலும் எவரும் அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அனுமதிக்கப்பட்ட பின்னர், அங்கு வித்தியாசம் பாராட்டக் கூடாது என்றும், எல்லாரும் ஒன்றுபோலவே நடத்தப்பட வேண்டும் என்றும் சட்டவிதி நிர்ணயிக்கிறது.

### தண்டனைகள் என்ன?

யாராவது தம் தொழில், வியாபாரம், அலுவல் வேலை, உத்தியோகம் ஆகியவற்றை மேற்கொண்டிருக்கையில், யாருக்காவது பொருளை விற்க மறுத்தாலும், தம் சேவையைச் செய்ய மறுத்தாலும் அந்தத் தொழில் முதலியவைகளை நடத்துவதற்கு அவருக்கு அனுமதிக்கப்பட்டுள்ள 'லைசென்ஸ்' ரத்து செய்து தண்டனை விதிக்கப்படலாமாம்.

இச்சட்டப்படிக்கான குற்றங்கள் 'காக்னைசபிள்' குற்றங்களாகும்—அதாவது, அதுபற்றி யாராவது புகார் செய்தால், ஒரு போலீஸ் அதிகாரி, நீதிபதி 'வாரண்ட்' இல்லாமலே அக்குற்றவாளியைக் கைது செய்யலாம்.

## திரு-தமிழக விபரங்கள்

### மத்திய சர்க்கார்- கேட்டுப் பெறுகின்றனர்

திருவனந்தபுரம், செப் 24—

சென்னை மாநிலத்துடன் இணைக்கப்பட வேண்டுமென தி. த. நா. காங்கிரஸ் கோரும் திரு-கொச்சி மாநிலத்தில் உள்ள 9 தமிழ் தாலுகாக்கள் சம்பந்தப்பட்ட முழு விபரங்களை உடனடி அனுப்பிவைக்க வேண்டுமென மத்திய சர்க்கார், மாநில சர்க்காருக்கு எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

ஆகவே அந்த 9 தமிழ் தாலுகாக்கள்ஒவ்வொன்றினுடைய நிலப்படம் (மேப்), அவைகளிலுள்ள தமிழர்-மலையாளி மக்கள் தொகை, மற்றும் புள்ளி விபரங்கள் ஆகியவை தயார் செய்யப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

## 'வரதட்சணை' முறைக்கு 'சீட்டு' கிழிகிறது!

### உத்திர பிரதேசத்திலும் அமுலாகும்

லக்னோ, செப். 23—

உத்தர பிரதேசத்திலும், வரதட்சணை முறை ஒழிக்கப்படுவதற்கான சட்டம் வருவதாகத் தெரிகிறது.

திருமணச் சீர்திருத்தம், வரதட்சணை ஒழிப்பு ஆகியவற்றிற்கான 1954-ம் ஆண்டு உத்திர பிரதேச மசோதா என்ற பெயரில் மசோதா ஒன்று, சட்டசபையில், அதனை ஒரு பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடுவதென விவாதிக்கப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது.

### ஆரம்பப்பள்ளிகளை சர்க்காரே ஏற்று நடத்தும்!

கர்னூல், செப். 23—

அடுத்த பள்ளிக்கூட ஆண்டில், ஆந்திர சர்க்கார், குறைந்தது இரண்டு மாவட்டங்களிலேனும் உள்ள சர்க்கார் உதவி பெறும் ஆரம்பப்பள்ளிகளை தாங்களே மேற்கொள்ளுவர் என்று தெரியவருகிறது.

# நாட்டுப் பிரிவினை கோருகிறது நாடு!

## கழக ஆண்டு விழா கொண்டாடினர் திராவிடர்!

★

இத்திங்கள் 17—23-ந் தேதி வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகவும், தி. மு. கழக 7-வது ஆண்டு விழாவாகவும் கொண்டு விழா நடத்துமாறு தி. மு. கழகத் தலைமை நிலையம் விடுத்த வேண்டுகோளின்படி, நாடெங்குமுள்ள தி. மு. கழகங்களும், உட்கிளைக் கழகங்களும் விழாக் கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்தியும், துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் கொண்டாடியுள்ளன.

"பிரிந்துபோகும் தனி உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கர்நாடகம்(துளுவம் உட்பட)—கேரளம் ஆகிய பகுதிகள், மொழிவழியிலும், தேவையான மாநில உரிமைகள் வழியும் தனித் தனிப் பிரிந்து, வெளிநாட்டு—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு அரசியல் ஆதிக்கத் தடுப்பு, வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, வாணிபம், போக்குவரத்துப் பற்றுக்கோடுகள், தபால்-தந்தி, உள்நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டுக் கொள்கை, நாணயச் செலாவணி, இன்னபிற வழிகளில் குறைந்த அளவுத் திட்டத்தில், ஒன்றுபட்ட சுதந்திரச் சமதர்மத் திராவிடக் குடியரசுக் கூட்டாட்சியை அடைய நாம் அனைவரும் பாடுபடுவோமாக"

என்ற தீர்மானத்தையும் அவைகள் ஒரேமனதாக நிறைவேற்றியுள்ளன. நாடெங்கும் நடைபெற்ற மேற்படி விழாச் செய்திகள் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன :—

### சென்னை—புளியந்தோப்பு (18-வது வட்ட) தி. மு. க.

18—9—55 காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில், தோழர் நித்தியானந்தம் தலைமையில் தி. மு. கழக 7-வது ஆண்டுவிழா, திராவிட நாடு பிரிவினை நாள் விழாக் கூட்டம் சிறப்புற நடைபெற்றது. தோழர் எஸ் சிவானந்தம் கழகக் கொடியை ஏற்றி வைத்துச் சொற்பொழிவாற்றினார்

அடுத்து, தோழர் ஈ. வெ கி. சம்பத் அவர்கள், சென்னை சோமஸீஸ்வரன் பேட்டை பொதுக்கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலிபரப்பப்பட்டது. பின்னர், கிளைக் கழகத் துணைச் செயலாளர் தோழர் கே. சுப்பிரமணி நன்றி நவில, தேநீர் விருந்தும் நடைபெற்றது.

தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்களின் சொற்பொழிவை ஒலிபரப்புச் செய்த தோழர்கள் செல்வம், எஸ் எஸ். பி. லிங்கம் ஆகியோருக்கும், 'டேப் ரிக்கார்டு' கொடுத்துதவிய தி. மு. கழகத் தலைமை நிலையத்திற்கும் நன்றி தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

பின்னர் கூட்ட இறுதியில் திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் ஒருமுகமாக நிறைவேற்றப்பட்டது

### சென்னை 3-வது வட்டம்

16—9—55 மாலை 6 மணிக்கு வண்ணை கல்லறை மைதானத்தில், தோழர் டி எஸ். வேலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இளம்பரிதி, நாஞ்சில் கி. மனோகரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். அன்று, முக்கிய வீதிகள் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டன.

### சென்னை 40-வது வட்டம்

19—9—55ல், சென்னை லால் பேகம் தெரு, எண். 4 இல்லத்தில், தோழர் என் கிருட்டிணன் தலைமையில் விழா நடைபெற்றது. தோழர் மணி கழகக் கொடி ஏற்றினார். தோழர்கள் கா. அப்பாதுரை, ம. செ. த. மூர்த்தி, மா மோகன், மா. வெ. இளங்கோ, இறையண்ணல், ம. பொ. சாரதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### ஆவடி

17—9—55-ல் கிளைக் கழகச் சார்பில் விழா கொண்டாடப்பட்டது. விழா பொதுக்கூட்டத்தில், தோழர்கள் சி. பி. சிற்றரசு, முகவை-ஆர். எஸ். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில், திராவிட நாடு பிரிவினைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### மீஞ்சூர்

18—9—55 பகல் 2 மணிக்கு தோழர் மு கேசவன் தலைமையில் ஊர்வலமும், மாலை 6 மணிக்கு தோழர் என். திராவிடச் செல்வன் தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் அப்துல்லா, கணேசன் ஆகியோர் இன்னிசை வழங்கினர். தோழர்கள் மு. குணசீலன், பி. எஸ். தேவதாஸ், பத்மன், செல்லப்பன், நாதம், டி. ராமசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### புவனகிரி

19—9—55 மாலை 6 மணிக்கு, தோழர் சா. செந்தில்நாயகம் தலைமையில் நடைபெற்ற கழகப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் கண்ணதாசன், முத்துகிருஷ்ணன் ஆகியோர் 'திராவிட நாடு பிரிவினை ஏன்?' என்பது குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

### சாரணைக்குப்பம்

வள்ளுவர் நாடகக் குழுவினரால், திராவிட நாடு பிரிவினை வார விழா 18—9—55 மாலை 7 மணிக்கு தோழர் சா.நா. சபாபதி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ராஜா, சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### வயிரிசெட்டிப்பாளையம் (கொப்பம்பட்டி)

22—9—55 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு, கிளைக் கழகப் பணி மனையில், தோழர் மு. பொன்னுசாமி தலைமையில் விழா கொண்டாடப் பெற்றது. தோழர்கள் பலர் 'பிரிவினை நான் அவசியம்' பற்றி சொற்பொழிவாற்றினர்.

### வரகனேரி

23—9—55-ல் 27-வது வட்டம் குழுமித் தெரு, தி. மு. கழகச் சார்பில், விழா கொண்டாடப்பட்டது. அன்று காலை $10\frac{1}{2}$ மணியளவில், திருச்சி நகர செயலாளர் தோழர் எம். எஸ்.மணி கொடியேற்றி வைத்தார்; இரவு கழகத் தோழர்கள் விழாவைக் கொண்டாடினர்; விழாவை ஒட்டி, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது — வரப்பெற்றோம், — நன்றி—பொறுப்பாளர்.

### சத்தியமங்கலம்

19—9—55 மாலை $7\frac{1}{2}$ மணிக்கு, அஷ்டஇலட்சுமி மண்டப மைதானத்தில் தோழர் கே. சிவக்கொழுந்து தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கோவைச் செழியன், சத்தி, வேலவன் ஆகியோர் நாட்டுப் பிரிவினையின் அவசியம் குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

### இராயபாளையம்

20—9—55-ல், திருமங்கலத்தை அடுத்த இராயபாளையத்தில் நாட்டுப் பிரிவினை நாள் விழா, கழக ஆண்டு விழா நடைபெற்றது. மாலை, தோழர் அலணன் தலைமையில் ஊர்வலமும், ஊர்ப் பொதுத் திடலில், தோழர் ஆ. இராமசாமி தலைமையில் விழாப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் இரசாக், க. ம. வ. நடராசன், பெ. பிச்சை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### கல்லுக்குழி (திருச்சி மா.)

17—9—55 மாலை 6 மணியளவில், கழகப் பணிமனை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, புதுக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது. சிறுவர், சிறுமியர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

### வேடிச்சிபாளையம்

17—9—55ல் மேற்படியூரில் விழா கொண்டாடப்பட்டது. அன்று மாலை தோழர் நாகமணி தலைமையில் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் நடைபெற்று, அழகிரி திடலை அடைந்ததும், விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. பி. இராமசாமி கழகக் கொடி ஏற்றிவைத்துச் சொற்பொழிவாற்றினார். தோழர் வி. பி. தங்கவேல், குழுமிய சிறுவர்கட்கும் பெரியோர்கட்கும் தாம்பூலம், சந்தனம், கல்கண்டு, மிட்டாய் போன்ற இனிப்புகள் வழங்கினார்.

### பச்சமலை

17—9—55 மாலை 5 மணிக்கு இவ்வூரில் திராவிட நாடு பிரிவினை விழா, கழக ஆண்டு விழா சிறப்புற நடைபெற்றது அன்று மாலை கழகக் கொடிகளுடன் ஊர்வலமும், பச்சமலை தொழிலாளர் கிளப்பில் தோழர் ஆர். பொன்னுச்சாமி தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் கதிர்வேலு, வி. எஸ். ராஜு, சி. பி. சிந்தனைசெல்வம், எஸ். சின்னுடைலர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### மதுரை

18—9—55-ல் மதுரை, தெற்கு வாசல், நாடார் வித்தியாசாலைத் தெருவிலுள்ள தாளமுத்து-நடராசன் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது. தோழர் எஸ். எஸ். இராசா கழகக் கொடியேற்றுவித்தார். சிறுவர்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

### வெள்ளலூர்

18—9—55 மாலை 6 மணிக்கு, தோழர் ஏ. கருப்பண்ணன் தலைமையில் நடைபெற்ற. விழாப் பொதுக்கூட்டத்தில் கிளைக் கழகச் செயலாளர் மற்றும் பலரும் தி மு. கழக இலட்சியங்கள் குறித்துச் சொற்பொழிவாற்றினர். கூட்ட ஆரம்பத்தில் கொடியேற்று விழா நடைபெற்றது.

### புதுவை—அரியநகர்

18—9—55 காலை 9 மணியளவில், சைக்கிள் ஊர்வலம் ஒன்று நகரின் எல்லா வீதிகளின் வழியாகவும், கழக இலட்சிய முழக்கங்களை எழுப்பிக்கொண்டு சென்றது காலை 10-30 மணியளவில், முருங்கம்பாக்கம் கிராமத்தில், துரௌபதையம்மன் கோவில் எதிரில், தோழர் வ. பாவாடை ராஜு கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பின்னர், பகல் 12 மணியளவில், கழக இல்லத்தில் சுமார் 200 ஏழைகட்கு கஞ்சி வார்க்கப்பட்டது. பிற்பகல் 3 மணியளவில், கழக இல்லத்தில் தோழர் ச. இலக்குமணன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் மா. சின்னப்பிள்ளை, கே. எஸ். கண்ணன், மா. இராமச்சந்திரன், செல்வர்க்கரசு, சு. கிருட்டிணன், வ. பாவாடை ராஜு ஆகியோர் தி மு. கழகக் கொள்கைகள் பற்றியும், கழக வளர்ச்சி பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

மாலை 6-30 மணிக்கு, தோழர் டி. லோகநாதன் குழுவினரின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

### இலங்கை-திம்பிரிக்காசாயா

18—9—55 மாலை $5\frac{1}{2}$ மணியளவில், திம்பிரிக்காசாயா ரோட்டில் உள்ள தாளமுத்து - நடராசன் படிப்பகத்தில், திம்பிரிக்காசாயா தி. மு. கழகக் கிளைச் சார்பில், தோழர் எஸ். செல்லப்பெருமான் தலைமையில் நடைபெற்றது. தோழர் வி கே. திராவிடமணி கழகக் கொடியை ஏற்றி வைத்துப் பேசினார்.

பின்னர் தோழர் பி. மாதவராசன், திராவிடம் தனியாகப் பிரிய வேண்டியதின் அவசியம் குறித்தும், திராவிடம் பிரியாவிட்டால் தாய் மொழிக்கேற்படவிருக்கும் அழிவு குறித்தும் சொற்பொழிவாற்றினார்.

### பெங்களூர்—பிளாக்பள்ளி

17—9—55 மாலை 6 மணிக்கு, பிளாக்பள்ளி தி. மு. கழகக் கட்டிடத்தில் தோழர் அ. அன்பன் தலைமையில் நடைபெற்றது.

'திராவிட நாடு பிரிவினை' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசினர்.

இரவு 8 மணிக்கு, திராவிட இயக்க இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தோழர் டி. மாதவன் ரூ 4—2—0 கிளைக் கழகத்திற்கு அன்பளிப்பாக அளித்து, சொற்பொழிவாற்றினார்.

### பொய்சேர்—பம்பாய்

19—9—55 மாலை 6-30 மணியளவில் கழகப் பணி மனை அருகில் தோழர் சி. இரா. அறிவீரன் தலைமையில் விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். இ. சேகர் எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். தோழர் எஸ் தியாகராசன் கழகக் கொடி ஏற்றி வைத்துச் சொற்பொழிவாற்றினார். பின்னர் தோழர்கள் டி. ஏ. அழகுமுத்து, து. சே. அருணாசலம், இரா. மா. சண்முகராசன், த. மு. பொற்கோ ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### பம்பாய்—அந்தேரி

19—9—55 காலை 9 மணியளவில், கோல்டுங்கரி பணிமனையில், தோழர் வி. துரைராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர் எல். எம். பாண்டியன் கூட்டத்தைத் துவக்கி வைத்து, பிரிவினை வாரம், ஆண்டு விழா குறித்துப் பேசினார். பின்னர், தோழர்கள் எஸ். கணேசன், எஸ். முத்து, ஈ முத்தையா, எஸ். துரைராஜ், பி. அல்லி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

# 'தென்னாட்டவர் இன்னும் சுதந்திரம் பெறவில்லை'

## 'வடநாட்டவர் ஆட்சியில் வாழ்கின்றனர்'

### பாரதி விழாவில் கருமுத்து தி. சுந்தரம்

"உண்மையில் நாம் இன்னும் சுதந்திரம் பெறவில்லை; வடக்கே உள்ளவர்கள் ஆட்சியில்தான் நாம் இன்று இருக்கிறோம்; இந்த நாட்டில் இந்திக்கு ஆதிக்கம் கூடாது; நம்முடைய மூதாதையர் எல்லாம் இந்தியைப் படித்தவர்களா? 200 ஆண்டுகளாகக் கற்றுவந்த ஆங்கிலத்தை விட்டுவிட்டு இந்தி மொழியைத் தமிழர்கள் நன்கு கற்க முடியாது; இந்தி மொழி எந்தக் காரணத்திற்காகவும் பொது மொழியாக இருக்கக்கூடாது; அதற்குத் தமிழர்கள் சிறிதும் இடங்கொடுக்கக் கூடாது,"

என்று, திரு. கருமுத்து தி. சுந்தரம் அவர்கள், மதுரை ஐக்கிய கிறித்தவ உயர்நிலைப் பள்ளியில், 21—9—55-ல் நடைபெற்ற பாரதி விழாவில் தலைமையுரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் சொன்னார் :—

"நல்ல சொற்கள் தமிழில் ஏராளமாக இருக்கின்றன—'அவைகளைப் பேச வேண்டும்'—என்று சொன்னால், 'வெறியர்கள்' என்று கூறுவது பொருத்தமா?' தமிழ் மக்களே தமிழ் மொழிக்கு எதிரியாக இருப்பது கண்டு வருந்தத்தான் வேண்டியிருக்கிறது; தமிழ் மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி வேண்டும்;

"பாரதியார் தமிழ் மொழிக்கு அதிகமாகத் தொண்டு செய்துள்ளார். அவர் பல மொழிகளைக் கற்றிருந்தாலும், 'தமிழ் மொழி தான் சிறந்த மொழி' என்று கூறுகிறார்; இத்தகைய சிறந்த மொழியை நாம், நம்முடைய ஆட்சி மொழியாக்காவிட்டால், இந்தியின் ஆதிக்கம் ஏற்பட்டுத் தமிழ் மொழியின் வளர்ச்சி குன்றிவிடும்."

# எகிப்தின் முன்னாள் இராணி நாரிமன்

### முஸ்லிம் கோர்ட்டில் இரண்டாவது கணவரின் வழக்கு

கெய்ரோ, செப். 23—

எகிப்தின் முன்னாள் இராணி நாரிமன், அவரது இரண்டாவது கணவரான டாக்டர் ஆதம் - எல் - நாகீப் விருப்பத்திற்கு எதிராக, எகிப்திலிருந்து புறப்பட்டுச் சென்று மேல்நாட்டில் வசித்து வருவதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

உடனே அவர் தனது இல்லத்திற்கு திரும்பிவிடுமாறு உத்திரவிடவேண்டுமென்று கோரி, அவரது இரண்டாவது கணவர், முஸ்லீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்துள்ளார். கோர்ட்டின் முடிவு, இராஜ தந்திர வட்டாரங்கள் மூலம் நாரிமனுக்கு அறிவிக்கப்படுமாம்.

# 40,375 தடவைகள்

### 'சங்கிலி' இழுக்கப்பட்டதாம்

### இரயில் வண்டிகள் நின்றது பற்றி அமைச்சர் அழகேசன்

1954—55-ம் ஆண்டில், இந்திய இரயில்வேக்களில் மொத்தம் 40,375 தடவை 'சங்கிலி' இழுக்கப்பட்டு வண்டிகள் நிறுத்தப்பட்டன என்றும், இவற்றில் 511-சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர் என்றும், 508 பேர்மீது வழக்குத் தொடரப்பட்டது என்றும், 22,484 சம்பவங்கள் சம்பந்தமாக சங்கிலியை இழுத்தவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லையென்றும், அமைச்சர் அழகேசன் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

### பிரதமர் புல்கானின் ஆப்கன் செல்வார்?

மாஸ்கோ, செப். 24—

தங்களுடைய நாட்டிற்கு வருகை தருமாறு, சோவியத் பிரதமர் புல்கானினை, ஆப்கன் சர்க்கார் அழைத்திருப்பதாகத் தெரிகிறது. இந்தியாவுக்குச் செல்லும் வழியிலோ, அல்லது இந்தியாவிலிருந்து ரஷ்யாவுக்குத் திரும்பும் போதோ மார்ஷல் புல்கானின் ஆப்கன் செல்லக்கூடுமாம்.

### பொது விற்பனை வரி சட்டத் திருத்த மசோதா

#### ஒரு வேண்டுகோள்

வாணியம்பாடி, செப். 20—

வாணியம்பாடி நகர வர்த்தக சங்கச் சார்பில், மேற்படி சங்கத் தலைவர் திரு. வி. எஸ். விசுவநாதம் சென்னை சட்ட சபையில் கொண்டுவரயிருக்கும் பொது விற்பனை வரி சட்டத்தின் 3-வது திருத்த மசோதாவை வர்த்தகப் பிரதிநிதிகள் கொண்ட குழுவில் பரிசீலனை செய்தபின், அம்மசோதாவைச் சட்டமாக்கும்படி தந்திமூலமாகச் சென்னை முதலமைச்சருக்கும், நிலவரி, நிதி அமைச்சர்களுக்கும், வாணியம்பாடி தொகுதி, திருப்பத்தூர் தொகுதி எம்.எல்.ஏ-க்களுக்கும், திருப்பத்தூர் நகராண்மைக் கழக உறுப்பினர்களுக்கும் தந்திமூலமாக கேட்டுக்கொண்டுள்ளார். (உ-நி.)

## விவசாயிகளுக்கு கடன் வசதி

### சென்னை சர்க்கார் திட்டம்

சென்னை, செப். 25—

கூட்டுறவு பாங்கிகள் மூலம் விவசாயிகளுக்குக் கடன் தருவதற்கும், மார்க்கெட்டில் வசதிகள் செய்யவும் அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், ரூ. 3 கோடி செலவிடுவதற்கு சென்னை சர்க்கார் திட்டங்கள் வகுத்துள்ளதாம்

புதிய திட்டத்தின்படி மொத்த முள்ள 20 கிராமங்களில், முக்கால் பாகத்திற்குக் கூட்டுறவு பாங்கிகள் திறவப்படும் — அதனையொட்டி, விவசாயக் குடும்பங்களின் விகிதத்தைக் கணக்கிட்டால் பாதி பேர்களுக்கு வசதிகள் கிடைக்கக்கூடும்.

### ஐசன்ஹோவருக்கு மாரடைப்பு நோய்

வாஷிங்டன், செப். 26—

டென்வர் என்னுமிடத்தில், அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஐசனோவர் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கையில், திடீரென அவருக்கு இலேசாக மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

மூன்று டாக்டர்கள் கையொப்பமிட்டு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மாரடைப்பை அவர் சமாளித்ததாகவும், இரத்த அழுத்தமும், நாடியின் நிலையும் ஒரே மாதிரியாக இருப்பதாகவும், தற்பொழுது 'சிக்கல்'கள் ஒன்றும் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

## உருவான மசோதா உறுதி பெறவில்லை?

புதுடில்லி, செப். 24—

நிரந்தரமான சட்டமாவதற்கு முன்பு, கம்பெனிகள் மசோதா, மீண்டும் மக்கள் சபைக்குச் செல்ல வேண்டிய ஒரு நிலைமையை ராஜ்யசபை உண்டாக்கியுள்ளது மக்கள் சபை நிறைவேற்றிய அம்மசோதாவின் ஒரு பிரிவை, ராஜ்யசபை திருத்தியதே, அதற்குரிய காரணமாகும்.

## தி. மு. க. பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் குடியேற்றம் வருகை

★

27-9-55 மாலை 4½ மணிக்கு, குடியேற்றம் மக்கள் மறுமலர்ச்சி மன்றத் துவக்கவிழாவில் சொற்பொழிவாற்றுவார்.

மாலை 5 மணிக்கு, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு, குடியேற்றம் நகர சபை சார்பில் வரவேற்பளிக்கப்படும்.

மாலை 6 மணிக்கு, குடியேற்றம் ஆற்றில் தி.மு. கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் சொற்பொழிவாற்றுவார்.

### சம்பத் சொற்பொழிவு

28—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை, எண் 2, துளசிங்க கிராமணி தெருவில், தோழர் கே. எம் கண்ணபிரான் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கோகலே மண்டபத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒலி பரப்பப்படும்.

## ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ.

சென்னை, செப். 26—

தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், தொண்டைப் புண் நோய் காரணமாக, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் தங்கி, 9—9—55 முதல் சிகிச்சை பெற்று வருகிறார். சட்டசபைக் கூட்ட நிகழ்ச்சிகளுக்கும் போகமுடியாமலிருக்கிறார்; மேலும் இரண்டு வாரங்கள் வரை தங்கி சிகிச்சை பெறவேண்டுமென்றும், தொண்டைப் புண் குணம் பெற்ற பிறகு, தொண்டையில் சிறு இரணசிகிச்சை செய்ய வேண்டி இருக்கும் என்றும் டாக்டர் திரு. சி. சத்தியநாராயணன் அபிப்பிராயப்படுகிறார். வழக்கம்போல் உணவு வகைகள் அதிகம் உட்கொள்ள முடியாத காரணத்தினால், தோழர் கோவிந்தசாமி அவர்கள் சிறிது உடல் பலக்குறைவாகவே இருக்கிறார். நண்பர்கள் அடிக்கடி போய்ப் பார்த்து வருகின்றார்கள்.

## தென்னாட்டு விவசாயிகள் படும் வேதனை

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

"ஆண்டு ஒன்றுக்கு, ஒரு தென்னிந்திய விவசாயத் தொழிலாளிக்கு 181 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கிறது; அகில இந்திய சராசரி விகிதமோ 218 நாட்களாகும்;

"இந்தியா முழுவதிலும் சராசரியாக விவசாயத் தொழிலாளருக்கு வேலை கிடைக்காத நாட்கள் 82-தான்; ஆனால், தென்னாட்டு விவசாயத் தொழிலாளர்களுக்கோ 115 நாட்களுக்கு சராசரியாக வேலை கிடைக்கவில்லை,"

என்றும் அந்த விசாரணையின்போது அறியப்பட்டிருக்கிறது

ஒரு விவசாயக் குடும்பத்தின் வருமானம் தென்னாட்டில் ஆண்டொன்றுக்கு ரூ. 382 மட்டும்தான்; ஆனால், அகில இந்தியாவில் சராசரி வருமானமோ, ரூ 447 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

"அதேபோல, தென்னிந்தியாவில்தான் கடன்பட்டிருப்போர் அதிகம் என்றும் தெரியவந்துள்ளது; 52 சதவிகித விவசாயக் குடும்பங்கள் தென்னாட்டில் கடன்பட்டிருக்கின்றன; ஆனால், அகில இந்திய சராசரி விகிதம் 45 சதவிகிதம் தான் என்றும் தெரியவந்துள்ளது.

## அண்ணாதுரை சொற்பொழிவு

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

களை விட்டுவைக்கிறோம்—'நாளை மலரும், பறித்துக்கொள்ளலாம்,'—என்று; அது மலருவதற்காக நாளை வரை காத்திருப்போம்; நாளை செல்லுவோம்; அப்போதும், அரும்பிய மொக்கு மலரவில்லையானால், மறுநாள் வரை காத்திருப்போம்; 'மலருகிறதா, அல்லது, மலராமலேயே—மொக்காகவே கருகி விடுகிறதா,'—என்று பொறுத்துப் பார்ப்போம்; மலர்ந்தால் பறித்துக்கொள்வோம்; 'மொக்குகள் மலரவில்லையே' என்று இன்றே கவலைப்பட்டால் முடியுமா? நாளை வரை பொறுத்திருக்கக்கூடாதா?

"அதுபோல, திராவிட இன மக்கள் நான்கு மொழி பேசுபவராயிருக்கின்றனர்; 'இந்த நான்கு மொழி பேசும் மக்களும் ஒரே இனத்தவர் என்பதால், தங்களுக்குள் ஒரு கூட்டாட்சி அமைத்துக்கொள்ள வேண்டும்; இந்த இன மக்கள் வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருப்பது கூடாது,' என்று கூறுகிறோம்; இதனை இன்று தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர் (மலர் மலர்ந்திருக்கிறது); ஆந்திரரும், கன்னடியரும், கேரளியர்களும் மொக்குகளாக இருக்கின்றனர்—நாளையோ மறுநாளோ மலரத்தான் செய்வர்; 'மலருகின்றனரா அல்லது மலராமலேயே கருகிவிடுகின்றனரா,' என்பதைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

"எனவே, 'திராவிட நாடு கிடைக்குமா கிடைக்காதா,' என்று பேசித்திரிகிற மாற்றுக் கட்சி நண்பர்கள், அந்தப் பேச்சைவிட்டு, 'திராவிட நாடு கோரிக்கை நியாயமா, இல்லையா?—என்பதைப் பேசட்டும்;

"தனிப் பண்பும், மொழியும், சிறப்பும், வரலாற்றுப் பெருமையும் கொண்ட திராவிடர், வடநாட்டவருக்கு அடிமைப்படுத்தப்பட்டிருப்பது எந்த வகையாலே நியாயம் என்பதை அந்த நண்பர்கள் கூறட்டும்,"

—என்று, அண்ணாதுரை அவர்கள், நேற்று சென்னையில் நடைபெற்ற 'திராவிட நாடு பிரிவினை வார விழா'க் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசிய அண்ணா அவர்கள், தட்சிணப் பிரதேசக் கோரிக்கை பற்றி கடந்த கிழமையில் தான் பெரம்பூர் கூட்டத்தில் கூறிய கருத்தை மீண்டும் எடுத்துக் காட்டி, தனது கருத்து நியாயமானது என்பதை நிலைநாட்டினார்கள். திராவிட நாடு ஏன் பிரிய வேண்டுமென்பதற்கான காரணங்களை விளக்கினார்கள். திராவிட நாடு கோரிக்கையைப் பெறுவதற்குரிய ஜனநாயக வழிமுறைகள் பற்றி குசுமான அறிவிப்பு தந்தார்கள். அரசியல் சட்டத்திலேயே கூட திராவிட நாடு பிரிவதற்கான வழி இருப்பதையும் சுட்டிக் காட்டி விளக்கம் தந்தார்கள்.

★

### நிகழ்ச்சி

சென்னை 14-வது வட்ட தி. மு கழகச் சார்பில், திராவிட நாடு பிரிவினை வாரமும், தி. மு. கழக ஏழாம் ஆண்டு விழாவும் 25—9—55-ல், சிறப்புற நடைபெற்றன.

சென்னை கொத்தவால்சாவடிக்கு அருகில்—அண்ணாபிள்ளைத் தெருவில் அன்று மாலை 6-30 மணி அளவில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் கோ. செங்குட்டுவன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்

தோழர்கள் க. இரகுநாதன், இளம்பரிதி, அ. பொன்னம்பலனார், டி சண்முகம் எம். எல். ஏ., ஆகியோர் கூட்டத்தில் பேசினர்.

அடுத்து, தோழர் இராசாபாதர், திராவிட நாடு பிரிவினை கோரும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

கூடியிருந்த பல்லாயிரம் மக்களும் கையொலி எழுப்பி, தீர்மானத்தை ஒரு மனதுடன் ஆதரித்து நிறைவேற்றினர்.

அடுத்து தோழியர் ஜி. கஸ்தூரி இயக்கப் பாடல்கள் பாடினார்.

பின்னர், தோழர் ஜெயராமன், 14-வது வட்ட தி. மு கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதியாக ரூ 101 கொண்ட பணமுடிப்பை அண்ணா அவர்களிடம் தந்தார்.

அண்ணா அவர்களுக்குப் பல மன்றங்கள், கழகங்கள், தனிப்பட்டோர் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

இறுதியாக அண்ணா அவர்கள், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்பதற்கான விளக்கம் தந்து, அரியதோர் கருத்துரை வழங்கினார்.

கூட்டம் மிக நெருக்கடியான இடத்தில் கூட்டப்பட்டிருந்தும் பல்லாயிரக் கணக்கில் மக்கள்—ஏராளமான தாய்மார்கள் உட்பட—கூட்டத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

தலைவர் முடிவுரைக்குப் பின் விழா இனிது முடிவுற்றது.

(ந. கி.)

## வாக்காளர் பட்டியலில் காணப்படும் குறைகளுக்குப் பரிகாரமில்லை?

## மக்களிடை விழிப்பு ஏற்படுவதற்கு பிரசாரம் செய்ய வேண்டுமாம்!

### கட்டாய 'ஓட்டு முறை' கோரிக்கை நிராகரிப்பு: சட்ட விவகார அமைச்சரின் சமாதானம்!

புதுடில்லி, செப். 25—

தேர்தல் சட்டத் திருத்தத்திற்காகக் கொண்டுவரப்பட்ட இரு மசோதாக்களையும் கூட்டுப் பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமெனும் பிரேரணையை மக்கள் சபை நிறைவேற்றியுள்ளது.

வாக்கு அளிப்பதைக் கட்டாயமாக்க வேண்டுமென்று கூறப்பட்ட யோசனையை ஏற்காமல் நிராகரித்த சட்ட விவகார அமைச்சர் எச். வி. படாஸ்கர், அவ்விதம் கட்டாயப்படுத்தினால் மக்களுக்குள் எதிர்ப்பு உணர்ச்சி ஏற்பட்டுவிடுமெனக் குறிப்பிட்டார்.

"தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்களுக்குக் கல்வி யோக்கியதாம்சம் ஏற்படுத்த இயலாது," என்றார்.

கட்சிகள் செலவிடும் பணத்திற்கான கணக்கை, தேர்தல் செலவுக் கணக்கில் சேர்க்காமல் ஒதுக்குவதற்கான பிரிவு, சுயேச்சையாளர்களைப் பாதிக்குமென்று உறுப்பினரொருவர் குறிப்பிட்டதையொட்டி அவர், "கட்சி முறை சர்க்கார் இருக்கவேண்டுமென பார்லிமெண்டரி ஜனநாயக முறை தெளிவாகக் கூறுகிறது; அம்மாதிரியான முறையில், தனிப்பட்டவர்களுக்கு முக்கியத்துவம் இல்லாமல்தான் இருக்கும்," என்று குறிப்பிட்டார்

"வாக்காளர் பட்டியல்களில் காணப்படும் குறைகளைத் தீர்க்க வேண்டுமெனில், தங்களுடைய உரிமையான வாக்கு அளித்தலைப் பிரயோகிக்க வேண்டுமென்ற விழிப்பு உணர்வு ஏற்படுவதற்கு மக்களிடையே பிரசாரம் செய்ய வேண்டும்; இந்த உரிமையைப் பிரயோகிப்பதற்கு, மக்கள் தாங்களாகவே சென்று வாக்காளர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்; வாக்களிப்பு உரிமையை சாமானிய மக்களும் உணர உணர, வாக்காளர் பட்டியலிலுள்ள தவறுகள் மறைந்துவிடும்; வாக்காளர் பட்டியலைக் கேட்கும் அபேட்சகர்களுக்கு அவற்றை இலவசமாக வழங்குவதற்குச் சாத்தியமில்லை; அதனால் சர்க்காருக்குப் பெரும் செலவு ஏற்படும்," என்றார்.

"தேர்தல் முடிந்து சட்டசபைகளின் ஆயுட்காலமான ஐந்து ஆண்டுகள் வரையிலும் தேர்தல் முடிவுகளைப் பற்றிய வழக்குகள் நடந்துகொண்டிருப்பது நியாயமன்று; அதிருப்திகரமான நிலைமையை அது காட்டுகிறது; பல்வேறு 'மன்றங்கள்' பிறப்பிக்கும் உத்திரவுகளாலும் வழக்குகளில் தாமதம் ஏற்படுவதற்கு ஓரளவுக்குக் காரணமுண்டு; இப்பிரச்சினையில் தக்க சீர்திருத்தம் செய்வது, மக்கள் சபையின் கடமையாகும்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

## 30,000 பேர் வீடிழந்தனர்

### 8,000 பேர் பலியாயினர்!

மெக்சிகோ நகரின் டம்பீகோ துறைமுகத்தில் வீசிய பயங்கரச் சுழல் காற்றின் காரணமாக, 8,000 பேர்களுக்கு மேல் பலியாகி இருப்பரெனக் கருதப்படுகிறதாம்; டம்பீகோ நகரம் மீண்டும் வளமுள்ளதாகத் தோன்றுவதற்குப்பல ஆண்டுகளாகுமென்றும், 30,000 மக்கள் வீடிழந்து தவிக்கின்றனரென்றும் கூறப்பட்டுள்ளது.

* * *

### உருவின்றி அழிந்த நகரம்!

பிரிட்டிஷ்தீவான பார்படாசிலும் சுழல் காற்று வீசியுள்ளது; கிரெனடாவில் மூன்றாவது முக்கிய நகரமான குயாவே சுழல் காற்றினால் சீரழிந்து, நகரம் தரைமட்டமாகி விட்டதாகக் கூறப்படுகிறது; அப்பகுதியில் வசித்த 3,000 மக்கள் என்னவானார்கள் என்பது செய்திகளில் அறிவிக்கப்படவில்லை.

## ரூ. 3 கோடி போதுமானதல்ல

புதுடில்லி, செப். 25—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இரயில்வே அபிவிருத்திக்கெனத் தயாரிக்கப்பட்டுள்ள திட்டங்களில் பிரயாணிகளின் வசதிகளை அதிகரிப்பதற்கென, மூன்று கோடி ரூபாய் மட்டும் ஒதுக்கப்பட்டிருப்பது போதுமானதல்ல அது, அதிகப்படுத்தப்பட வேண்டும்," என்று, தேசீய இரயில் உபயோகிப்போர் சங்கக் கூட்டத்தில் கோரப்பட்டிருக்கிறது.

கூட்டத்திற்கு இரயில்வே மந்திரி லால்பகதூர் சாஸ்திரி தலைமை தாங்கியிருக்கிறார்.

டிக்கெட்டில்லாப் பிரயாணத்தை ஒழிப்பது, மலைவாச நிலையங்களுக்கு சலுகைக் கட்டணம் வழங்குவது முதலிய பிரச்சினைகளும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன.

## சென்னை சட்டசபை சபாநாயகர் பதவி

### 'மும்முனை'ப் போட்டி

சென்னை, செப் 26—

நாளை நடைபெறவிருக்கும் சென்னை சட்ட சபை சபாநாயகர் பதவிக்கு ஏற்கனவே, தாழ்த்தப்பட்ட வகுப்பினர் சம்மேளனத்தைச் சேர்ந்த திரு. ஏ. இரத்தினம் அபேட்சை பத்திரம் தாக்கல் செய்துள்ளாரல்லவா?

இரண்டாவதாக எதிர்க்கட்சிகள் சார்பில், தஞ்சை திரு எம். சுயம்பிரகாசமும் தன்னுடைய அபேட்சை பத்திரத்தைத் தாக்கல் செய்துள்ளார்.

சட்ட சபை காங்கிரஸ் கட்சி தனது அபேட்சகரை இன்று தேர்ந்தெடுக்கிறது.

## மொராக்கோவில் பொது வேலை நிறுத்தம்

### சுதந்திரப் பேச்சுவார்த்தைகள் தாமதத்தின் எதிரொலி

ராபட், செப். 26—

சுயாட்சி பெறுவதற்காக நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் மிகத் தாமதப்படுவதைக் கண்ணுற்ற மொராக்கோ தேசீயவாதிகள் இன்று மொராக்கோ முழுவதும் ஒரு பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபடத் தீர்மானித்தனர்.

பேச்சுவார்த்தைகளில் இன்னும் தாமதம் நீடிக்குமானால், மொராக்கோவில் மீண்டும் ஒரு பெரும் போராட்டம் நடைபெறக்கூடும் என்று மொராக்கோ தேசியக் கட்சிக்கு நெருங்கிய வட்டாரங்கள் கருத்தறிவிக்கின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம் ஏ,